## சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் எண்.17 புல எண்.279/2 ல் 1436 சதுர அடி தனியார் நிலத்தினை ஆரிங்டன் சாலையை அகலப்படுத்துவதற்காக – ரூ.1,22,48,920/– செலவில் கையகப்படுத்துதல் – தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாநு1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.160 நாள்: 10.08.2010

ஆடி – 25,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/19935/2009, நாள் 20.10.2009

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில், சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் எண்.17 புல எண்.279/2 ல் 1436 சதுர அடி தனியார் நிலத்தினை ஆரிங்டன் சாலையை அகலப்படுத்துவதற்காக கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கக் கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் என்றும், இந்நேர்வில் நிலஎடுப்புக்கு பரிந்துரை செய்யப்பட்ட நிலங்களை எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் கூட்டு புலத்தணிக்கை செய்துள்ளார் என்றும் நில எடுப்புக்குட்பட்ட நிலத்தில் புரதான சின்னங்கள் ஏதுமில்லை என்றும் ஒரு மதில் சுவர் மட்டும் அமைந்துள்ளது என்றும், விவசாய நிலங்கள் இல்லை என்றும் மற்றும் எந்த உயர் மின் அழுத்த கம்பியும் செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இந்நிலத்திற்கான உத்தேச மதிப்பு ரூ1,22,48,920/– என கீழ்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| (i) | ஒரு சதுர அடி ரூ.6000/– வீதம் 1436 சதுர அடி நிலத்தின் மதிப்பு | ரூ.86,16,000/– |
| (ii) | சுற்றுச்சுவர் மதிப்பு (தோராயமாக) | ரூ.10,000/– |
| | மொத்தம் | ரூ.86,26,000/– |
| | 30% ஆறுதல் தொகை | ரூ.25,87,800/– |
| | 12% கூடுதல் சந்தை மதிப்பு (ஒரு வருடத்திற்கு) | ரூ.10,35,120/– |
| | ஆக மொத்தம் | ரூ.1,22,48,920/– |

மேலும் சென்னை மாநகராட்சி மன்றத்தின் தீர்மானம் எண்.190/2010, நாள் 29.04.2010 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், கையகபடுத்தப்படும் நிலங்கள் தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம், 1978 ன் கீழ் கவரப்படவில்லை எனவும் தெரிவித்து, மேற்படி சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் எண்.17 புல எண்.279/2 ல் 1436 சதுர அடி தனியார் நிலத்தினை ஆரிங்டன் சாலையை அகலப்படுத்துவதற்காக ரூ.1,22,48,920/– (ரூபாய் ஒரு கோடி இருபத்து இரண்டு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து தொள்ளாயிரத்தி இருபது மட்டும்) செலவில் தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கையகப்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய் மற்றும் நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா.கு.எண்.24439/நிநி2/10–1, நாள் 07.06.2010 மற்றும் 31915/ந.நி.ம.கு.வ/10, நாள் 15.06.2010).

/ ஆளுநரின் ஆணைப்படி /

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்